www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

R

Kanchipuram District

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: [ ]

## விலங்கியல்

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்: 70

### பகுதி - I

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 15×1=15

1. நாள்சார் ஒழுங்கமைவு இயக்கத்தினை கட்டுப்படுத்தும் ஹார்மோன் எது?
   அ) மெலடோனின் ஆ) மெலனின் இ) ஆக்ஸிடோசின் ஈ) வாஸோப்ரஸ்ஸின்
2. முழங்கையின் கூர்மை பகுதி:
   அ) இணைவு ஆ) ஏகுரோமியன் நீட்சி இ) கிளிநாய்டுகுழி ஈ) ஒலிகிரணன் நீட்சி
3. கீழ்க்கண்டவற்றுள் எது சமதரத்தில் இல்லை
   அ) இன்செக்டா ஆ) ஆர்த்தோப்டீரா இ) பிரைமேட்டா ஈ) டிப்டிரா
4. பக்கக்கோட்டு உணர்வு உறுப்புகள் இதில் காணப்படுகிறது.
   அ) சலமாண்டர் ஆ) மீன் இ) தண்ணீர் பாம்பு ஈ) தவளை
5. ஓரடுக்கு, கனசதுர வடிவச் செல்களைக் கொண்டவை
   அ) கனசதுர வடிவ எபிதீலியம் ஆ) தட்டை வடிவ எபிதீலியம்
   இ) எளிய எபிதீலியம் ஈ) தூண் வடிவ எபிதீலியம்
6. எதில் திறந்த வகை சுற்றோட்ட மண்டலம் காணப்படுகின்றன.
   அ) தவளை ஆ) கரப்பான்பூச்சி இ) மண்புழு ஈ) புறா
7. சிறுகுடலில் செயல்மிகு கடத்தல் நிகழ்ச்சி மூலம் எது உட்கிரகிக்கப்படுகிறது?
   அ)குளுக்கோஸ் ஆ) அமினோ அமிலங்கள்
   இ) சோடியம் அயனிகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்
8. பாக்டீரியா அல்லது வைரஸ் தொற்றுகளால் நுரையீரல்கள் வீங்கிய நிலையை அடைவதற்கு
   அ) காசநோய் ஆ) நிமோனியா இ) மார்புச்சளி நோய் ஈ) எம்ஃபைசீமா
9. இரத்தம் உறைதலில் பங்கேற்கும் பிளாஸ்மா புரதம் எது?
   அ) குளோபுலின் ஆ) ஃபைப்ரினோஜன் இ) அல்புமின் ஈ) சீரம் அமைலேஸ்
10. கீழ்க்கண்ட எப்பொருள் யூரிக் அமிலத்துடன் இணைந்து சிறுநீரகக்கற்களை உருவாக்குகிறது?
    அ) சிலிக்கேட்டுகள் ஆ) தாது உப்புகள் இ) கால்சியம் கார்பனேட் ஈ) கால்சியம் ஆக்சிலேட்
11. தசைச்சுருக்கத்திற்கான ATP யேஸ் நொதி உள்ள இடம்
    அ).ஆக்டினின் ஆ) ட்ரோப்போனின் இ) மையோசின் ஈ) ஆக்டின்
12. உணர்வு நரம்பு காதுகேளாமை இதற்கு காரணம்
    அ) செவி நரம்பு ஆ) செவிப்பறை கிழிதல்
    இ) மெழுகு ஏற்படுத்தும் அடைப்பு ஈ) நடுசெவியில் தொற்று
13. பிளாஸ்மாவில் இன்சுலினின் அரை ஆயுட்காலம்
    அ) 4 நிமிடங்கள் ஆ) 5 நிமிடங்கள் இ) 6 நிமிடங்கள் ஈ) 7 நிமிடங்கள்
14. இரத்தச் சீரத்தில் கால்சியம் அளவை நெறிப்படுத்துவது
    அ) தைராக்ஸின் ஆ) FSH இ) கணையம் ஈ) தைராய்டு மற்றும் பாராதைராய்டு
15. தூண்டப்பட்ட இனப்பெருக்க தொழில் நுட்பம் இதில் பயன்படுகிறது
    அ) கடல் மீன் வளர்ப்பு ஆ) மீன்பிடித்தலில் இ) மீன்வளர்ப்பில் ஈ) உள்நாட்டு மீன்வளர்ப்பில்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



## பகுதி - II

குறிப்பு : எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6×2=12

16. கிளாடோகிராம் என்றால் என்ன?
17. வளைதசைப் புழுக்களில் இரத்தத்தில் காணப்படும் சுவாச நிறமிகள் யாவை?
18. அலரி தசையின் இரண்டு பணிகளை எழுதுக.
19. உணவு விழுங்கப்படும்போது குரல் வளையை மூடும் சுவாச அமைப்பு எது?
20. மிட்ரல் வால்வு மற்றும் அரைச்சந்திர வால்வுகளை வேறுபடுத்துக.
21. கபால எலும்புகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
22. ஹார்மோன்கள் என்பவை வேதித்தூதுவர்கள் எனப்படும் - நியாயப்படுத்துக.
23. குருட்டுப்புள்ளி எனப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?
24. தேனீக்களின் மூவகைச் சமூகக் கட்டமைப்பின் பெயர்களைக் கூறு.

## பகுதி - III

குறிப்பு :எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.
வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6×3=18

25. ஃபெலிடே குடும்பத்தின் முக்கியப் பண்புகள் யாவை?
26. மீன்களில் காணப்படும் காற்றுப் பைகளின் பண்புகளைக் குறிப்பிடுக.
27. தவளையில் காணும் சுவாச முறைகளைப் பெயரிடுக.
28. கல்லீரல் சிதைவு நோய் என்றால் என்ன?
29. இரத்தம் ஏன் தனித்துவமான இணைப்புத்திசு என்றழைக்கப்படுகிறது?
30. நைட்ரஜன் நார்கோஸிஸ் நிலை எனப்படுவது யாது?
31. குச்சி மற்றும் கூம்பு செல்களை வேறுபடுத்துக.
32. ஸ்பிக்மோமானோமீட்டரின் மருத்துவ முக்கியத்துவம் யாது?
33. அரக்குப் பூச்சியின் பொருளாதார முக்கியத்துவத்தைக் கூறு.

## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5×5=25

34. அ) பெயரிடுவதற்கான அடிப்படை விதிகள் யாவை? (அல்லது)
ஆ) வளைதசைப் புழுக்களின் முக்கிய பண்புகள் யாவை?
35. அ) தவளையின் பெண் இனப்பெருக்க மண்டலத்தை விவரி. (அல்லது)
ஆ) ஸ்டார்ச் மூலக்கூறுகள் சிறுகுடலை அடைவது முதல் ஏற்படும் வேதி மாற்றங்களைப் பட்டியலிடுக.
36. அ) சுவாச மண்டலக் கோளாறுகளை பற்றி விவரி. (அல்லது)
ஆ) நிணநீர் என்றால் என்ன? அதன் பயன் யாது?
37. அ) சிறுநீர்ப் பெருக்கெதிர் ஹார்மோனின் பணி யாது? அது எங்கே உருவாக்கப்படுகிறது? இதன் சுரப்பை அதிகரிக்கவும், குறைக்கவும் தூண்டுவது எது? (அல்லது)
ஆ) தொடர் உடற்பயிற்சி செய்வதன் நன்மைகள் யாவை?
38. அ) X - கதிர்கள் என்பவை யாவை? அவற்றின் மருத்துவ முக்கியத்துவத்தை குறிப்பிடுக. (அல்லது)
ஆ) பட்டுப்பூச்சியின் பொருளாதார முக்கியத்துவத்தைக் கூறுக.

-------------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com